வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: சரவணகுமார்

தேதி: 18.02.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

**இந்தியாவும் - கத்தாரும்**, வர்த்தகம், தொழில்நுட்பம், கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளிலும், மக்கள் நிலையிலான தொடர்புகளிலும், கூட்டாண்மை உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள, முடிவு செய்துள்ளன.

விவசாயிகளுக்கான பிரதமரின் **ஃபசல் பீமா** – பயிர்க் காப்பீட்டுத் திட்டம் இன்று, 9 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது.

தமிழக சட்டப் பேரவையின் **பட்ஜெட் கூட்டத் தொடர்**, அடுத்த மாதம் 14ஆம் தேதி தொடங்க உள்ளது.

புதுச்சேரியில், ட்ரோன்கள் மூலமான மத்திய அரசின் **NAKSHA நில அளவை** திட்டப் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

---

*மோடி -கத்தார் 1* (17)

இந்தியாவும், கத்தாரும், வர்த்தகம், எரிசக்தி, முதலீடு, தொழில்நுட்பம், புதுமையாக்கம், உணவுப் பாதுகாப்பு, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளிலும், மக்கள் நிலையிலான தொடர்புகளிலும், கூட்டாண்மை உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள முடிவு செய்துள்ளன. 2 நாள் பயணமாக புதுடெல்லி வந்துள்ள, கத்தார் அமீர் **ஷேக் தமீம் பின் ஹமாத் அல்-தானி-யை** இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார். பிராந்தியப் பிரச்சனைகள் மற்றும் பரஸ்பர

அக்கறை உள்ள உலகப் பிரச்சனைகளில், இரு தலைவர்களும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

தொடர்ந்து, இருநாட்டு அமைச்சர்கள் மற்றும் உயர்நிலை அதிகாரிகளின் பங்கேற்புடன், பிரதிநிதிகள் நிலையிலும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இந்தியத் தரப்பில், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன், தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல், மற்றும், உயர்நிலை அதிகாரிகளும், கத்தார் தரப்பில், அந்நாட்டு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளும், இதில் கலந்து கொண்டனர்.

பிரதிநிதிகள் நிலையிலான பேச்சு வார்த்தையில் இறுதி செய்யப்பட்ட 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், பிரதமர் திரு. நரேந்திர மோடி,

*மோடி-கத்தார் 2 (10)*

கத்தார் அமீர் ஷேக் அல்-தானி ஆகியோர் முன்னிலையில் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இரட்டை வரி விதிப்பை தவிர்க்கவும், வருமான வரி ஏய்ப்பை தவிர்க்கவும், இந்த ஒப்பந்தங்களில் வகை செய்யப் பட்டுள்ளது.

முன்னதாக, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இன்று, கத்தார் நாட்டின் தொழில்-வர்த்தகத் துறை அமைச்சருடன் இணைந்து, இந்தியா-கத்தார் கூட்டு வர்த்தகப் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்திய தொழில்கள் கூட்டமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த இந்நிகழ்ச்சியின் போது, வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பாகவும், 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

கத்தார் அமீர் புதுடெல்லியில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வையும் சந்திக்கிறார்.

-------------------------------

*பயிர் காப்பீடு (12)*

விவசாயிகளுக்கான பிரதமரின் ஃபசல் பீமா – பயிர்க் காப்பீட்டுத் திட்டம் இன்று, 9 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. இயற்கை சீற்றங்களால்,

பயிர் இழப்பை சந்திக்கும் விவசாயிகளுக்கு நிதி ஆதரவு வழங்குவதற்கான இத்திட்டத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கி வைத்தார். விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் அதே வேளை, புதுமையான வேளாண் முறைகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதிலும், இத்திட்டம் முக்கிய பங்காற்றி உள்ளது. திட்டத்தின் வெற்றியையும், எதிர்கால பலன்களுக்கான வாய்ப்புகளையும் கருத்தில் கொண்டு, பிரதமரின் ஃபசல் பீமா திட்டத்தையும், பருநிலை அடிப்படையிலான மறு சீரமைக்கப்பட்ட பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தையும், மொத்தம் சுமார் 69 ஆயிரத்து 515 கோடி ரூபாய் பட்ஜெட் ஒதுக்கீட்டுடன், வரவிருக்கும் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

--------------------------------

கும்பமேளா (5)

பிரயாக்ராஜில் நடைபெறும் கும்பமேளாவில், பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் கலந்து கொண்டு, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர். புதுச்சேரி மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த பக்தர்கள் பலரும் இதில் அடங்குவர். மஹா கும்பமேளாவில் பங்கேற்றுள்ள கோவை பக்தர் ஒருவரை, அங்குள்ள எமது நிருபர் சந்தித்து பேசுகையில்....

--------------------------------

தமிழ் சங்கமம் (6)

வாரணாசியில், 3ஆம் ஆண்டு காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்றுள்ள தமிழகக் குழுவினர், கங்கை நதியில் புனித நீராடி, பழங்கால கோவில்களில் வழிபாடு நடத்தினர். காசியில், மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தையும் இவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர். புதுச்சேரியில் இருந்து, காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்றுள்ள வான்மதி, தமது அனுபவங்கள் குறித்து எமது செய்தியாளரிடம் பேசுகையில்......

--------------------------------

பிஜேபி (6)

70 உறுப்பினர் டெல்லி சட்டமன்றத் தேர்தலில், 48 இடங்களில் வெற்றி பெற்ற பாரதீய ஜனதா கட்சியின் சட்டமன்றக் குழுக் கூட்டம், புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது. அடுத்த டெல்லி முதலமைச்சர் யார் என்பது, இக்கூட்டத்தில் இறுதியாகலாம் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. புதிய முதலமைச்சரின் பதவியேற்பு விழா, டெல்லி ராம் லீலா மைதானத்தில், வரும் வியாழன் கிழமை நடைபெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

-------------------------------

தமிழ்நாடு சட்டப் பே□வை (10)

தமிழக சட்டப் பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர், அடுத்த மாதம் 14ஆம் தேதி தொடங்கும் என இன்று அறிவிக்கப் பட்டுள்ளது. அன்றைய தினம், வரவிருக்கும் நிதியாண்டிற்கான மாநில அரசின் நிதி நிலை அறிக்கையை, நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவையில் தாக்கல் செய்வார் என்று, தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தெரிவித்துள்ளார். வேளாண் நிதி நிலை அறிக்கை, மார்ச் 15ஆம் தேதி சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும், அவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையை தயாரிப்பது தொடர்பாக, நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு இன்று, சென்னை தலைமை செயலகத்தில், அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

-------------------------------

ஸ்டாலின் அடிக்கல் (7)

திருச்சி மாவட்டம் பஞ்சப்பூர், மற்றும், மதுரை மாட்டுத் தாவணியில், மொத்தம் 717 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கும் பணிகளுக்கு, தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின், இன்று சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து, காணொளிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார். மொத்தம் 12 ஆயிரம்

தகவல் தொழில்நுட்ப வல்லுனர்கள் பணி புரியத் தேவையான வசதிகளை உள்ளடக்கியதாக, இப்புதிய டைடல் பூங்காக்கள் அமைய உள்ளன.

--------------------------------

முருகன் (12)

தமிழகத்தில், பெண் குழந்தைகள், பெண் காவலர்கள் என, வயது வித்தியாசமின்றி பெண்களுக்கு எதிராக நடக்கும் குற்றங்களுக்கு, மாநில அரசு, பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார். கோவை குனியமுத்தூர் பகுதியில், 17 வயது சிறுமி, கல்லூரி மாணவர்களால் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப் பட்டதை கண்டித்து இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். தமிழகத்தில் சொந்த ஊரை விட்டு வெளி மாவட்டங்களில் தங்கி பயிலும் மாணவர்களின் கைகளில், போதை பொருள் புழக்கம் அதிகரித்து வருவதே இத்தகைய குற்றங்களுக்கு காரணம் என்றும், பள்ளி-கல்லூரிகளில், இளைய சமூகத்தினரிடையே நல்லெண்ணங்களை விதைக்க தேவையான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுதல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

--------------------------------

*நில அளவை 1 (10)*

ட்ரோன்கள் மூலம் சேகரிக்கப்படும், புவி அமைவிடத் தரவுகளின் அடிப்படையிலான NAKSHA-தேசிய நகர்ப்புற நில அளவைத் திட்டத்தை, முன்னோடித் திட்டமாக, புதுச்சேரி மாநிலம் முருங்கப்பாக்கம் வருவாய் கிராமத்தில் அமல்படுத்த, மத்திய அரசு முடிவு செய்துள்ளது. திட்டப் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். புதிய தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான இப்பணிகளால், பட்டா மாற்றம் போன்ற அரசின் சேவைகள், மக்களுக்கு விரைந்து கிடைக்க ஏதுவாகும் என்று, அவர் கூறினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன், உள்ளாட்சித் துறை இயக்குநர் திரு. சக்திவேல், நில

அளவை மற்றும் பதிவேட்டுத் துறை இயக்குநர் திரு. செந்தில் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*நில அளவை* 2 (11)

மத்திய அரசின் நக்ஷா திட்டத்தின் கீழ், ஆளில்லா குட்டி விமானங்கள் மூலமாக எடுக்கப்படும் ஒளிப்படங்களின் அடிப்படையில், வருவாய் மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை ஊழியர்கள் நில அளவைப் பணிகளை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் புல வரைபடம் தயாரிக்கப்படும் என்றும், சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு ஆட்சேபனை இருந்தால் விதிமுறைகளின்படி சரிசெய்யப்பட்டு, சொத்து வரித் தரவுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட இறுதி வரைபடங்கள் மற்றும் நில ஆவணங்கள், நில உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் என்றும், நில அளவை மற்றும் பதிவேட்டுத் துறை தெரிவித்துள்ளது. முருங்கப்பாக்கம் வருவாய் கிராமத்தில் உள்ள பொது மக்கள் மற்றும் நில உரிமையாளர்கள் திட்டப் பணிகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

--------------------------------

*சிங்காவேலர்* (6)

புதுச்சேரியில், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள், அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. வெங்கடசுப்பா ரெட்டியார் சாலையில் அமைந்துள்ள சிங்காரவேலர் சிலைக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு.ஆர். செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. லட்சுமி காந்தன், திரு. பிரகாஷ் குமார் உள்ளிட்டோர், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

--------------------------------

*கொசு ஒழிப்பு* (8)

புதுச்சேரியில் கொசு ஒழிப்பு தொடர்பாக, உள்ளாட்சித் துறை இயக்குநர் அறிவுறுத்தலின் பேரில் நடைபெற்ற, பல்துறை அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டத்தில், குப்பை அகற்றும் பணிகள், கொசு மருந்து தெளிக்கும் பணிகள், மற்றும், புகை மருந்து அடிக்கும் பணிகளை

தீவிரப்படுத்தவும், பொதுப் பணித் துறை சார்ந்த வாய்க்கால்களை அத்துறையினர் மூலம் தூய்மைப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டது. உள்ளாட்சித் துறை, சுகாதாரத் துறை, நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகள், இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

--------------------------------

புதுச்சேரி விழிப்புணர்வு (7)

புதுச்சேரியில் டெங்கு மற்றும் சிக்கன்குனியா நோயை கட்டுப்படுத்தும் நோக்கிலான விழிப்புணர்வு ஆட்டோ வாகனங்களை சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர் டாக்டர் ரவிச்சந்திரன் இன்று காலை கொடியசைத்து துவக்கி வைத்தார். பண்பலை வானொலிகள், உள்ளூர் தொலைக்காட்சிகள், திரையரங்குகள், வீதி நாடகங்கள் மூலமாக மக்கள் இடையே விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளவும் சுகாதாரத் துறை ஏற்பாடு செய்துள்ளது.

--------------------------------

கிரிக்கெட் (5)

ஐசிசி சேம்பியன்ஸ் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டித் தொடர் நாளை தொடங்க உள்ளது. கராச்சியில் நாளை நடைபெற உள்ள ஆட்டத்தில், பாகிஸ்தான் அணி, நியூசிலாந்து அணியுடன் மோதுகிறது. இந்தியா தனது முதலாவது போட்டியில், நாளை மறுநாள் துபாயில், பங்களாதேஷ்-உடன் மோத உள்ளது.

--------------------------------

வேவ்ஸ் (8)

ஊடகம் மற்றும் பொழுது போக்குத் துறைக்கான முக்கிய நிகழ்வாக, மும்பையில், வரும் மே 1 முதல் 4ஆம் தேதி வரை நடைபெற உள்ள வேவ்ஸ் உச்சி மாநாட்டிற்கான முன்னோட்டப் படங்களை தயாரிக்க, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சகம், netFlix தளத்துடன் இணைந்து, டிரெய்லர் போட்டி ஒன்றை நடத்துகிறது. வீடியோ எடிட்டிங் மற்றும்

உள்ளடக்கத் தயாரிப்பில் ஆர்வம் உள்ள இளைஞர்கள் மற்றும் திரைப்பட கலைஞர்கள், வரும் மார்ச் 31ஆம் தேதிக்குள், இதற்கான இணைய தளத்தில் பெயர்ப் பதிவு செய்து கொண்டு, போட்டியில் பங்கேற்கலாம் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது.

--------------------------------

*தேர்தல் ஆணையர் (5)*

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமாரின் பதவிக் காலம் இன்றுடன் முடிவடையும் நிலையில், தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார், புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார். கேரளத்தைச் சேர்ந்த முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியான திரு. கியானேஷ் குமார், நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சகத்தில் செயலராகவும் ஏற்கனவே பணி புரிந்துள்ளார்.

--------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

**இந்தியாவும் - கத்தாரும்**, வர்த்தகம், தொழில்நுட்பம், கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளிலும், மக்கள் நிலையிலான தொடர்புகளிலும், கூட்டாண்மை உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள, முடிவு செய்துள்ளன.

விவசாயிகளுக்கான பிரதமரின் **ஃபசல் பீமா** – பயிர்க் காப்பீட்டுத் திட்டம் இன்று, 9 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது.

தமிழக சட்டப் பேரவையின் **பட்ஜெட் கூட்டத் தொடர்**, அடுத்த மாதம் 14ஆம் தேதி தொடங்க உள்ளது.

புதுச்சேரியில், ட்ரோன்கள் மூலமான மத்திய அரசின் **NAKSHA நில அளவை** திட்டப் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**